ஸ்வாமி விவேகானந்தரின் 150வது பிறந்த தின விழாக் கொண்டாட்டம் உலகெங்கும் ஜனவரி 2013இல் ஆரம்பித்து 2014 ஜனவரி வரை நடைபெறுகிறது. ஸ்வாமிஜியின் அற்புத ஆற்றலை நினைவு கூரும் சிறப்புக் கட்டுரை 12th January is Swamiji's Birth Day.

# ஸ்பரிசவேதி ஸ்வாமி விவேகானந்தர்

By **ச.நாகராஜன்**

Post no 787 dated 12th January 2014.

## தொட்டதைப் பொன்னாக்கும் மூலிகை

ஸ்பரிசவேதி என்ற அபூர்வ மூலிகையைப் பற்றி நமது இலக்கியங்கள் பெருமையாக்க் கூறுகின்றன. அந்த மூலிகை எதன் மீது பட்டாலும் அது தங்கமாக ஆகி விடுமாம். இலக்கியத்தில் காணப்படும் இந்த மூலிகையை இதுவரை யாரும் பார்க்காவிட்டாலும் மனிதர்களுள் ஒருவராகத் தோன்றி ஸ்பரிசவேதியாக விளங்கிய அவதார புருஷரை உலகம் நன்கு அறிந்திருக்கிறது. ஸ்வாமி விவேகானந்தர் தோன்றி 150 ஆண்டுகள் ஆகி விட்ட இந்தத் தருணத்தில் அவரைப் பார்த்த மாத்திரத்தில் மாறிய ஏராளமானோரில் இருவரைப் பார்ப்போம்.

### நீங்கள் தான் எனக்கு நன்றி சொல்ல வேண்டும்!

ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சிகாகோவில் இருந்த காலத்தில் அவர் தங்கி இருந்த வீ ட்டின்உரிமையாளர் ஜான் டி.ராக்பெல்லருடன் (1839-1937) வணிகத் தொடர்பில் நெருக்கமான தொடர்பு கொண்டவர். மிகவும் அபூர்வமான ஒரு அற்புத புருஷரான ஸ்வாமிஜியைப் பற்றி அடிக்கடி அவர் நண்பர்களுடன் பேசி மகிழ்வார். இதை அடிக்கடி ராக்பெல்லரும் கேட்க நேர்ந்தது. அவரையும் ஸ்வாமிஜியைப் பார்க்க வருமாறு நண்பர்கள்

அழைத்தனர். ஆனால் ராக்பெல்லரோ ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி அவரைப் பார்க்க மறுத்தார். அப்போது அவர் மிகவும் பிரபலமாகவில்லை என்றாலும் சக்தி படைத்த பணக்காரராக ஆகிக் கொண்டிருந்தார். ஆனால் திடீரென்று ஒரு நாள் அவர் ஸ்வாமிஜியைப் பார்க்க விரும்பவில்லை என்றாலும் ஏதோ ஒரு சக்தி அவரை உந்த ஸ்வாமிஜி தங்கி இருந்த வீட்டிற்கு அவர் வந்தார். அங்கு கதவைத் திறந்த சமையற்காரரை ஒரு புறம் தள்ளி விட்டு ஸ்வாமிஜி எங்கே இருக்கிறார் என்று கேட்டார். அவர் சுட்டிக் காட்டிய அறைக்கு அனுமதி கூடப் பெறாமல் நேரே சென்றார். ஸ்வாமிஜி தனது அறையில் தனது டேபிளுக்குப் பின்னால் அமர்ந்திருந்தார். ராக்பெல்லர் நுழைந்ததும் அவரை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. ஆனால் கடகடவென்று ராக்பெல்லரின் கடந்த காலத்தை விவரிக்க ஆரம்பித்தார். அத்தோடு கடவுள் அவரிடம அபரிமிதமாகக் கொடுத்திருக்கும் பணம் அவருடையதில்லை என்றும் அதைப் பெற்ற அவர் ஒரு கருவி மாத்திரம் தான் என்றும் அதைக் கொண்டு உலகத்திற்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

அசந்து போன ராக்பெல்லருக்குச் சற்று கோபம் வந்தது. அவரிடம் இதுவரை யாரும் இப்படிப் பேசியதில்லை. போய் வருகிறேன் என்று கூடச் சொல்லாமல் வெளியேறினார். ஆனால் ஸ்வாமிஜியின் மந்திர வார்த்தைகள் அவர் உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருந்தது. ஒரு வாரம் கழிந்தது. மீண்டும் ஸ்வாமிஜியிடம் வந்த ராக்பெல்லர் அவரை அதே டேபிளின் பின்னால் பார்த்தார். பொதுக் காரியங்களுக்காக ஏராளமான பணத்தை ஒதுக்கி இருக்கும் ஆவண பேப்பரை ஒன்றைத் தூக்கி ஸ்வாமிஜியிடம் போட்ட ராக்பெல்லர்,"இப்போது நீங்கள் திருப்தி அடைவீர்கள்என நினைக்கிறேன். நீங்கள் எனக்கு நன்றி சொல்ல வேண்டும்" என்றார். ஸ்வாமிஜியோ தன் கண்களைக் கூட மேலே தூக்கவில்லை.பின்னர் பேப்பரை எடுத்துப் படித்துப் பார்த்தார். பிறகு ராக்பெல்லரை நோக்கிக் கூறினார்:-"நீங்கள் தான் எனக்கு நன்றி சொல்ல வேண்டும்."

அது முதல் ராக்பெல்லர் உலகின் மிகப் பெரிய வள்ளலாக மாறினார். அறப்பணிகளுக்கு ஏராளமான பணத்தை அவர் அள்ளித் தந்ததை வரலாறு அறியும்.ஸ்வாமிஜியின் சில வார்த்தைகள் அவர் வாழ்க்கையையே பொருள் பொதிந்ததாக மாற்றின!

தன்னை ஒரே ஒரு முறை சில நிமிடங்கள் பார்த்தவரையே மாற்றி தங்கமாக ஆக்கிய ஸ்வாமிஜியின் பெருமையை இந்த சம்பவத்தின் வாயிலாகக் கூறி இருப்பவர் எம்மா கால்வே என்னும் பிரபல ஒபேரா பாடகி. இவரையும் மாற்றியவர் ஸ்வாமிஜி தான்!

**பிரபல பாடகி எம்மா கால்வேயின் சோகம்!**

பிரான்ஸை சேர்ந்த பிரபல பாடகி எம்மா கால்வே பேரழகி. இசை மேதை. (தோற்றம் 15-8-1858 மறைவு 6-1-1942) அவரது வசீகர குரலுக்கு உலகமே அடி பணிந்திருந்தது. மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அவர் மிகவும் கஷ்டப்பட்டுப் படிப்படியாக முன்னேறி புகழேணியின் உச்சத்திற்குச் சென்றார். நியூயார்க்கிலும், லண்டனிலும் மாறி மாறி இசை நிகழ்ச்சிகளை நடத்தி அனைவரையும் பிரமிக்க வைத்தார் அவர். 261 இசை நிகழ்ச்சிகளை 1893இலிருந்து 1904க்குள் நடத்தி உலக ரிகார்டை ஏற்படுத்தினார். ஆனால் அவர் சொந்த வாழ்க்கையில் ஒரு பெரும் சோகம் நிகழ்ந்தது.ரசிகர்களின் பலத்த கரகோஷத்திற்கிடையே மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த எம்மா கால்வேக்கு அவரது மகள் ஒரு தீ விபத்தில் கோரமாக இறந்த செய்தி மேடையில் கிடைக்கவே அங்கேயே மயங்கி விழுந்தார். வாழ்வே சூனியமாக ஆகி விட்ட நிலை ஏற்பட்டது.

**அமைதியுடன் இரு!**

இந்த நிலையில் அமெரிக்காவில் பிரபலமடைந்திருக்கும் துறவி விவேகானந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு சிகாகோவில் அவரைக் காண

வந்தார். அவரைக் காணச் சென்ற போது அவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் பேசுவதற்கு முன்னால் எதையும் பேச வேண்டாம் என்று எம்மா கால்வேக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அவர் முன்னால் மௌனமாக நின்றார் எம்மா கால்வே. சிறிது நேரத்தில் கண் திறந்த ஸ்வாமிஜி நிமிர்ந்து பார்க்காமல் பேச ஆரம்பித்தார்:- "என் குழந்தாய். என்ன ஒரு மோசமான சூழ்நிலையில் நீ இருக்கிறாய். அமைதியாக இரு. அது தான் முக்கியம்" பின்னர் மெதுவான அமைதியான குரலில் எம்மா கால்வேயின் பெயரைக் கூட அறிந்திராத அந்த அற்புத புருஷர் அவரது அந்தரங்க விஷயங்கள் அனைத்தையும் பிட்டுப் பிட்டு வைத்தார். அவரது பிரச்சினைகளைச் சொன்னார்.

அந்த அனுபவம் அமானுஷ்யமானது, அற்புதமானது என்று எம்மா கால்வே பின்னால் கூறினார்.

"எப்படி இதெல்லாம் உங்களுக்குத் தெரியும்?" என்று வியப்புடன் கேட்ட கால்வேக்கு." யாரும் இல்லை. அது அவசியம் என்று நீ நினைக்கிறாயா! உன்னை ஒரு திறந்த புத்தகம் போலப் பார்த்துப் படிக்கிறேன்" என்றார் ஸ்வாமிஜி.

கடைசியில் விடைபெறும் போது," எல்லாவற்றையும் மறந்து விடு. மீண்டும் சந்தோஷமாக இரு. உன் ஆரோக்கியத்தை மேம்படச் செய்.மனதில் உன் துன்பங்களை எண்ணி எண்ணி புழுங்காதே. உனது ஆன்மீக நிலையும் உன் கலை வாழ்க்கையும் அதைக் கேட்கிறது." என்று ஆறுதல் கூறினார் ஸ்வாமிஜி.

"எனது எல்லா கவலையும் பறந்து போயிற்று அந்தக் கணமே" என்று கூறுகிறார் எம்மா கால்வே தன் முதல் சந்திப்பைப் பற்றி. அன்றிலிருந்து

ஸ்வாமிஜியிடம் பக்தி கலந்த அன்புடன் பழக ஆரம்பித்த அவர் தன்னுடன் ஸ்வாமிஜியை தன் கப்பலில் எகிப்துக்கு அழைத்துச் சென்றார்.ஸ்வாமிஜியின் ஆசீர்வாதம் அவர் வாழ்க்கையையே ஆன்மீகத்தில் மூழ்க அடித்தது.

பின்னால் பேலூர் ராமகிருஷ்ண மடத்திற்கு வந்த அவர்," இங்குள்ள தூய அழகிய துறவிகள் இன்னும் மேம்பட்ட சிறந்த, ஞானம் நிரம்பிய இன்னொரு பிரபஞ்சத்தைச் சேர்ந்தவர்கள் போல உள்ளனர்" என்றார்.

தனது பயண நினைவுகளில் எம்மா கால்வேயைப் பற்றி எழுதியுள்ளார் ஸ்வாமிஜி. எம்மா கால்வேயோ தனது சுயசரிதையான எனது வாழ்க்கை (My Life - Emma Calve) என்ற நூலில் ஸ்வாமிஜியுடனான தனது சந்திப்பைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். ராக்பெல்லர் ஸ்வாமிஜியைச் சந்தித்த போது நிகழ்ந்ததையும் அவர் தான் எழுதியுள்ளார். (இவற்றை Complete Works of Swami Vivekananda Volume 9 - 321,322--ஆம் பக்கங்களில் காணலாம்)

ஸ்வாமிஜி ஒரு ஸ்பரிசவேதி என்பதை நூற்றுக்கணக்கான சம்பவங்கள் பறைசாற்றுகின்றன. மாதிரிக்கு அவற்றில் தலையாய இரண்டு சம்பவங்களைப் பார்த்தோம்!

**சின்ன உண்மை!**

**ஆழ்ந்த பரவச இறை நிலையில் ஒரு முறை ஸ்வாமிஜி இருந்த போது, "இப்போது என்னைத் தொட்டவர்கள் மகானாகி விடுவார்கள்" என்றார். அனைவரும் திகைத்திருந்த போது கிறிஸ்தவ கல்லூரியில் துணை விஞ்ஞானப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த சிங்காரவேலு முதலியார் ஒரு உந்துதல் ஏற்பட ஸ்வாமிஜியைத் தொட்டு விட்டார்.அதன் பிறகு அவர் வாழ்க்கை தவ வாழ்க்கையாக மாறிப் போனது. பின்னாளில் பிரபுத்த பாரதம் பத்திரிக்கையின் பொறுப்பாளராகவும் அவர் விளங்கினார்.**